# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1902/53 - 2015 පෙබරවාරි මස 20 වැනි සිකුරාදා - 2015.02.20

1902/53 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம்.: எம்றீஆர்/எல்என்டி/ஏஸீகிவ்யுஜ/எல்/2/3921.

பொதுமக்கள் தேவை நிமித்தம் அவசியப்படும், கீழே குறிப்பிடப்படும் காணியை எடுத்துக் கொள்வதென அரசு உத்தேசித்திருப்பதாக, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், கெகனதுர கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், மு. பி. மாறை 2588 ஆம் இலக்க வரை படத்தில் இலக்கம் 01, 02 எனக் குறிப்பிடப்படும் காணிகள் கெகனதுர திட்டத்தின் முக்கிய அருவி மண்சரிவுக்குட்பட்ட பிரதேசத்தை திருத்தியமைப்பதற்காக காணிகள் எடுக்கப் படவுள்ளன.

துணைப்பதிவேடு

1. துண்டு இல.: 01

காணியின் பெயர்: கொட்டிகல்கந்தவத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; ஆரம்ப உரிமையாளர்: வேதகத்த லங்கா தனியார் நிறுவனம் இலக்கம் 40, காலிமுகத்திடல், கொழும்பு 03; விஸ்தீரணம்: 0.0403 ஹெக்டயார்.

2. துண்டு இல.: 02

காணியின் பெயர்: கொட்டிகல்கந்தவத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; ஆரம்ப உரிமையாளர்: வேதகத்த லங்கா தனியார் நிறுவனம் இலக்கம் 40, காலிமுகத்திடல், கொழும்பு 03; விஸ்தீரணம்: 0.3040 ஹெக்டயார்.

மேற் குறிப்பிட்ட காணி மீதான உரிமைகளுக்கு அல்லது வேறும் வழிகளிலான தொடர்புடையவர்கள் அனைவரும், தத்தமது அல்லது அவரவர்களின் எழுத்து மூல அதிகாரம் அளிக்கப்பட்டவர்களோ, 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆம் திகதி மு. ப. 10.30 மணிக்கு மாத்தறைப் பிரதேச செயலகத்தில் என்னை நேர்காணல் வேண்டும். இன்னும், 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆம் திகதிக்கு முன்னர் அந்தக் காணிகள் மீதான அவர்களது உரிமைகளின் தன்மை பற்றியும் அந்தக் காணி உரிமைகள் எடுக்கப்படுவதனால் நஷ்டஈடு கோருவதற்கான காரணங்கள் பற்றிய விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையுடன் அது கணிப்பீடு செய்யப்பட்ட விதம் பற்றியும், எனக்கு இரண்டு பிரதிகளில் எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

ரஞ்ஜித் யாபா,<br>
பிரதேச செயலாளர்,<br>
மாத்தறை.

பிரதேச செயலகம்,<br>
மாத்தறை,<br>
2015, பெப்புருவரி 18.

3 - 200

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: 6/3/7/15/13/2/01.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/108E.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2014.08.20 ஆம் திகதிய, 1876/29 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பு.பு. வ. 20 குறைநிரப்பி இலக்கம் 150 பத்திரம் 171 இல், துண்டு இலக்கம் 5070 இனது விசாலம் 0.4074 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனது விசாலம் 0.4047 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ஆர். பீ. என். பீ. கருணாதிலக்க,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2015, பெப்புருவரி 18.

3 - 201

---

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: 6/3/7/15/8/10.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/108G.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2014.09.19 ஆம் திகதிய, 1880/29 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பூ. பூ. வ 20 குறைநிரப்பி இலக்கம் 99 பத்திரம் 164 இல் துண்டு இலக்கம் 4654 இனது விசாலம் 0.226 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனது விசாலம் 0.0226 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ஆர். பீ. என். பீ. கருணாதிலக்க,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேசச் செயலகம்,
நாவுல,
2015, பெப்புருவரி 18.

3 - 202

---

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: கல்/6/எல்ஏ/4669.
காணி அமைச்சின் இல.: 03J/83/H/96.

2006.10.20 ஆந் திகதிய 1467/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்தமானியில் கீழ் வெளியிடப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில் காணியின் அளவானது 2004.12.23 ஆந் திகதியிடப்பட்ட பி. பி. பு 4196 இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 02 இனால் காட்டப்பட்டுள்ள 0.335 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி என பிரசுரிக்கப்பட்ட விடயம் 2004.12.23 ஆந் திகதியிடப்பட்ட பி. பி. பு 4196 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.208 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி என்று திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

கே. பீ. ரங்கன பிரனான்து,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேசச் செயலகம்,
கல்பிட்டி,
2015, சனவரி 29.

3 - 203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.